செ.வெ.எண்: 03 நாள்: 02.09.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) நேரடி சேர்க்கை மூலம் பயிற்சியில் சேர 15.09.2021 வரை மாணவ/மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அருண் தம்புராஜ், இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள நாகப்பட்டினம், திருக்குவளை மற்றும் செம்போடை அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 15.09.2021 வரை 2021 - 2022ஆம் ஆண்டிற்கான நேரடி சேர்க்கை மூலம் பயிற்சியாளர்கள் சேர்க்கை நடைபெறுகிறது. எனவே, மேற்படி, தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியில் சேர விருப்பம் உள்ள **மாணவ/மாணவிகள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அசல் கல்வி சான்றிதழ்களுடன் இன்றே நேரில் சென்று பயிற்சியில் சேரலாம்** என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அருண் தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள சேர்க்கை உதவி மைய தொலைபேசி (04365-250126) எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**